பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 06 2025 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. பேரிடர் அபாயங்கள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கும் நடைமுறைகளின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இங்கிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நிறைவடைந்திருப்பது, இருநாட்டு உறவுகளில் குறிப்பிடத்தக்க ஒரு மைல்கல் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. விவசாயிகளின் முன்னேற்றம் மற்றும் வேளாண்மையை மேம்படுத்துவதன் மூலமே வளர்ந்த இந்தியாவை உருவாக்க முடியும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடர்பாக, திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர் இன்று, ஜெர்மன் பிரதிநிதிகளை சந்தித்து இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

5. தாஷ்கண்ட் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள்--

**<<<<<<>>>>>>**

பேரிடர் அபாயங்கள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கும் நடைமுறைகளின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரான்சில் நடைபெறும் பேரிடர் மீட்பு கூட்டமைப்பின் மாநாட்டில் காணொலி வாயிலாக உரையாற்றிய பிரதமர், பேரிடரால் பாதிக்கப்படக்கூடிய தீவுகள் மற்றும் நாடுகள் மிகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த கூட்டமைப்பில் ஆப்பிரிக்கா இணைந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

வளரும் நாடுகள் இந்த கூட்டமைப்பின் நிதியை பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கும் கருவிகளால் உரிய நேரத்தில் தகவல் கிடைக்கப்பெற்று பேரிடரை தவிர்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டிற்கு ஆதரவு அளித்த பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

**<<<<<<>>>>>>**

இங்கிலாந்து உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நிறைவடைந்திருப்பது, இருநாட்டு உறவுகளில் குறிப்பிடத்தக்க ஒரு மைல்கல் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லி வந்துள்ள இங்கிலாந்து வெளியுறவுத்துறை செயலாளர் திரு **David Lammy** தலைமையிலான குழுவினரை சந்தித்து திரு ஜெய்சங்கர் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகத்தை மேம்படுத்துவதுடன், முதலீடுகளுக்கான வாய்ப்புகளையும் அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

மேலும், வழங்கல் மற்றும் மதிப்புக்கூட்டு தொடரை வலுப்படுத்துவதற்கான சூழலையும் இந்த ஒப்பந்தம் உருவாக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு இங்கிலாந்து அளித்த ஆதரவுக்காக இந்தியா சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<<>>>>>>

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான அனைத்துக்கட்சி குழுவினர் இன்று, ஜெர்மன் நாட்டின் முக்கிய பிரதிநிதிகளை சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான செயல்பாடுகளை அப்போது அவர்கள் விளக்கமாக எடுத்துக்கூறினர்.

வெளியுறவுக்கொள்கை, சர்வதேச விவகாரங்கள் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து இந்தியக் குழுவினர் விரிவாக எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

விவசாயிகளின் முன்னேற்றம் மற்றும் வேளாண்மையை மேம்படுத்துவதன் மூலம் மட்டுமே வளர்ந்த இந்தியாவை உருவாக்க முடியும் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் **Sehore** என்ற இடத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், விஞ்ஞானிகளின் ஆலோசனைப்படி வேளாண் சாகுபடியை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மகளிருக்கு அதிகாரம் அளிக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதன்மூலம், மத்தியப்பிரதேச மாநிலத்தில் மட்டும் ஒரு கோடியே 48 லட்சம் மகளிர் நிதி சுதந்திரம் பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

இம்மாநிலத்தில் பிரதமரின் கிராமப்புற வீடுகட்டும் திட்டத்திற்காக 9 ஆயிரத்து 424 கோடி ரூபாயும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்திற்காக 6 ஆயிரத்து 263 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் வளர்ச்சி இயக்க பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய அரசு விவசாயிகளுக்காக செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து இதில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்த பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக, தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் கணபதி சமுத்திரம் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய – மாநில அரசுகளின் விவசாய நலத்திட்டங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***Sound Byte - லஷ்மணன் - 42 Sec.)***

<<<<<<>>>>>>

தேர்தலில் தோல்வியடையும் போதெல்லாம் காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி பொய்யான தகவல்களை பரப்பி வருவதாக பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா குறை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மகாராஷ்ட்ரா தேர்தலுக்கு பின்னர் ராகுல்காந்தி தெரிவித்த கருத்துக்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் தோல்விக்கான காரணம் குறித்து அவரது கட்சிக்குள் சுய பரிசோதனை செய்வதை தவிர்த்து, தேவையற்ற வதந்திகளை திரு ராகுல்காந்தி தெரிவித்து வருவதாக திரு ஜெ பி நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

இதனிடையே, தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் தொடர்பான திரு ராகுல் காந்தியின் குற்றச்சாட்டு அரசியல் சட்ட விதிமுறைகளுக்கு எதிரானது என்று தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் செல்வமகள் சேமிப்புத் திட்டம் அஞ்சல்துறை மூலமாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பத்து வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் மாதந்தோறும் 250 ரூபாய் முதல், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை செலுத்தி கணக்கு தொடங்கலாம்.

21 ஆண்டுகள் முடிவில் முதுர்ச்சி தொகையை பெற்று பெண்களின் உயர்கல்வி மற்றும் திருமணத்திற்கு பயன்படுத்தும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டிருப்பதால் பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று தமிழகத்தின் காஞ்சிபுரம் பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

***(Voice Byte - பயனாளி – 25 Sec.)***

<<<<<<>>>>>>

யுக்ரைனின் **'Kharkiv '** நகரில் ரஷ்ய படையினர் இன்று காலை நடத்திய வான்வழித் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். 21 பேர் காயமடைந்தனர்.

· **'Kharkiv '** தவிர **'Donetsk, Odesa, Ternopil** உள்ளிட்ட நகரங்களிலும் ரஷ்ய படையினர் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளனர்.

ரஷ்யாவின் 200-க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை இடைமறித்து யுக்ரைன் விமானப்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும், 18-க்கும் மேற்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளும், 13 வீடுகளும் சேதமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மை காலமாக நடத்தப்பட்ட தாக்குதலில் இது மிக மோசமான தாக்குதலாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

மின் வணிக இணையதளங்கள் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளில் ஈடுபடாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு தங்களுக்கு தாங்களே சுய தணிக்கையில் ஈடுபட வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், டார்க் பேட்டர்ன்ஸ் எனப்படும் போலியான இருண்ட வடிவமைப்புகளை அடையாளம் காண்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தாஸ்கண்ட் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 7-6, 6-3 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் **'Ksenia Laskutova** –வை வென்றார்.

--------

தைவான் ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று நான்கு தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

மகளிர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டத்தில் பூஜா தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **Triple Jump** பிரிவில் அப்துல்லா அபுபக்கர் தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 100 மீட்டர் தடை ஓட்டத்தில் இந்தியாவின் **Jyothi Yarraji** – யும், ஆடவர் 110 மீட்டர் தடை ஓட்டத்தில் **Tejas Shirse** –யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

--------------

இந்தியா ஏ அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இங்கிலாந்து லயன்ஸ் அணி முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை ஒரு விக்கெட் இழப்பிற்கு 118 ரன் எடுத்துள்ளது.

---------------

புரோ லீக் ஹாக்கி போட்டியில் இந்தியா – நெதர்லாந்து இடையேயான முதலாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

**Amstelveen**–ல் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**